සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

පළමුවාර අවසාන ඇගයීම
முதலாம் தவணை பரீட்சை
First Term Evaluation
2018

| ශ්‍රේණිය / தரம் / Grade | 06 | විෂයය / பாடம் / Subject | வரலாறு | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | කාලය / காலம் / Time | 2Hour |
|---|---|---|---|---|---|---|---|

## பகுதி – I

- **இலக்கம் 01 முதல் 20 வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிந்து, அதன் கீழ் கோடிடுக.**

01. வரலாறு பற்றிய அறிவினைப் பெற உதவும் அனைத்தையும் குறிப்பிடும் பெயர் யாது?

    i. தொல்பொருள்    ii. மூலாதாரம்
    iii. கர்ணபரம்பரை கதைகள்    iv. பண புத்தகங்கள்

02. மகா விகாரையைச் சேர்ந்த மகாநாம தேரரால் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரம்,

    i. தீபவம்சம்    ii. தூபவம்சம்    iii. மகாவம்சம்    iv. சூலவம்சம்

03. பொலனறுவை கல்விகாரையைக் கட்டுவித்தவர்,

    i. தேவநம்பியதீச மன்னன்    ii. மகா பராக்கிரமபாகு மன்னன்
    iii. நிஸ்ஸங்கமல்ல மன்னன்    iv. துட்டகைமுனு மன்னன்

04. வரலாற்றைக் கற்க உதவும் புராதன நூல்கள், கர்ண பரம்பரைக் கதைகள் என்பன பொதுவாக எப்பெயர் கொண்டழைக்கப்படுகின்றன?

    i. இலக்கிய மூலாதாரம்    ii. தொல்பொருள் மூலாதாரம்
    iii. வரலாற்றுக் கதைகள்    iv. பண கதைகள்

05. கிறிஸ்துவின் பிறப்பின் பின்னுள்ள காலம் எவ்வாறு அழைக்கப்படும்?

    i. கிறிஸ்துவுக்கு பின்    ii. கிறிஸ்துவுக்கு முன்    iii. நூற்றாண்டு    iv. புத்த வருடம்

06. கிறிஸ்துவுக்குப்பின் எத்தனையாம் ஆண்டு மகிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்தார்?

    i. 200 வருடங்களுக்கு முன்    ii. 250 வருடங்களுக்கு முன்
    iii. 250 வருடங்களுக்குப் பின்    iv. 270 வருடங்களுக்குப் பின்

07. முதலாம் புத்த வருடத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு,

    i. புத்தர் பரிநிர்வாணம் அடைந்தமை.
    ii. கிறிஸ்து நாதர் பிறந்தமை.
    iii. வசப மன்னனின் ஆட்சி ஆரம்பமாகியமை.
    iv. மகாசேன மன்னனின் ஆட்சி ஆரம்பமாகியமை.

08. பூமியில் முதன் முதலில் தாவரங்கள் தோன்றின. எனின் அடுத்ததாக (2வதாக) தோன்றியவை,

i. விலங்குகள் ii. பற்றீரியாக்கள் iii. மரவட்டைகள் iv. ஒபபீனியாக்கள்

09. A- விலங்குகளின் எலும்புகளைக் கொண்டு வீடுகளை அமைத்தல்.

B- மரக்கறிகளை சமைத்து உண்டமை.

மேற்கூறப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய மானிட பரிணாமம்,

i. ஹோமோ இரெக்டஸ் ii. ஹோமோ நியண்டதாலன்சிஸ்

iii. ஹோமோ ஹபிலஸ் iv. ஒஸ்ரலோபித்திகஸ்

10. பெரும் பனி யுகத்தில் நிலத்தில் வாழ்ந்த விலங்கு வகை,

i. சிம்பன்சி ii. வானரங்கள் iii. மமத் யானை iv. டைனோசிரஸ்

11. ஆதி மனிதனால் கண்டுபிடிக்கப்பட்டு, தற்போதும் எமக்கு மிகவும் பயனைத் தருகின்ற விடயத்திற்கு உதாரணமாவது,

i. நீர் ii. நெருப்பு iii. கல்லாயுதம் iv. மொழி

12. புராதன மனிதன் இறந்த மனிதனின் எலும்புகளுக்கு வர்ணம் தீட்டுவதற்காக பயன்படுத்திய கல்,

i. கிரி கல் ii. சுண்ணக் கல் iii. குரு கல் iv. களிமண் கல்

13. • ஓரிடத்தில் நீண்ட காலம் வாழ்தல்.

• இலை குழைகள், தடிகள் பயன்படுத்தி வீடுகள் அமைத்தல்.

மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய காலம்,

i. புதிய கற்காலம் ii. இடைக்கற்காலம்

iii. பழைய கற்காலம் iv. பெலியோசொயிக் யுகம்

14. மனிதர்கள் முதன்முதலில் எவ்யுகத்தில் கடவுள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்?

i. இடைக்கற்காலம் ii. புதிய கற்காலம்

iii. பழைய கற்காலம் iv. வரலாற்று காலம்

15. புதிய கற்காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வு,

i. மரங்களின் கனிகளை உணவாகக் கொண்டமை.

ii. வர்ணங்களைக் கொண்டு கற்பாறைகளில் சித்திரம் வரைந்தமை.

iii. வில் அம்பு பாவனை

iv. மக்களுக்கிடையே சொத்துக்கள் அடிப்படையில் ஏழை- பணக்காரன் எனும் பாகுபாடு ஏற்படல்.

16. மனிதர்கள் ஓரிடத்தில் வாழும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ள, மேற்கொண்ட நடவடிக்கை,

i. விவசாயம் செய்தமை . ii. கிராமங்கள் தோன்றியமை.

iii. கல்லாயுதங்கள் உற்பத்தி செய்தமை. iv. கடவுளை வழிபட்டமை.

17. நிறைய பயனுள்ள விடயங்களைக் கண்டுபிடித்த மானிடப் பரிணாமம் எது?

i. ஒஸ்ரலோபித்திக்கஸ் ii. ஹோமோ இரெக்டஸ்

iii. ஹோமோ சேப்பியன்ஸ் iv. ஹோமோ ஹபிலஸ்

18. மனிதனால் முன் முதலில் நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டதற்கான சான்று கிடைக்கப்பெற்ற இடம்,

i. ஈராக் ii. இஸ்ரேல் iii. சீனா iv. அரேபியா

19. விவசாய யுகத்தில் விவசாய நடவடிக்கை, மந்தைகளின் பாதுகாப்பு கருதி, மக்கள் எதில் ஈடுபட்டனர்?

i. இறை வழிபாடு ii. கல்லாயுத பாவனை

iii. வில்-அம்பு பாவனை iv. இறந்தவர்களை வழிபடுதல்

20. தொல்பொருள் ஆராய்ச்சியாளரால் புராதன காலத்திற்குரிய களி மண்ணைக் கொண்டு செய்யப்பட்ட அரிவாள் கிடைக்கப்பெற்ற இடம்,

i. ஆபிரிக்க கற்குகை ii. சீனா

iii. மெக்சிக்கோ iv. இஸ்ரேல் ஆகும். (40 புள்ளிகள்)

## பகுதி – II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **ஏனைய நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**
- **மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடயளிக்க.**

01) i. எமது நாட்டின் வரலாறு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளக்கூடிய, புராதன இலக்கிய மூலாதாரங்கள் இரண்டைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)

ii. கி.பி 2018 ஐ புத்த வருடத்தில் எழுதுக. (02 புள்ளிகள்)

iii. தீபவம்சம் எந்நூற்றாண்டில் எழுதப்பட்டது? (02 புள்ளிகள்)

iv. இவ்வுருவில் காணப்படுவது யாது? (02 புள்ளிகள்)

v. இது எதனைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?(02 புள்ளிகள்)

vi. இந்நிர்மாணத்தை செய்த மனிதன் யார்? (02 புள்ளிகள்)



02) i. வரலாறு என்றால் என்ன என்பதனை எளிய முறையில் எழுதுக. (03 புள்ளிகள்)

ii. உமக்கு, உமது நாட்டைப் பற்றிய வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறைகள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. வரலாற்றைக் கற்பதனால் ஏற்படும் பயன்கள் ஐந்தை எழுதுக. (05 புள்ளிகள்)

03) i. வரலாற்று நிகழ்வுகளை கால அடிப்படையில் அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் எளிய முறைகள் இரண்டை எழுதுக. (03 புள்ளிகள்)

ii. பின்வரும் A,B யில் காணப்படும் நிகழ்வுகளுடன் தொடர்புடைய வருடங்களைக் குறிப்பிடுக.

A- முகமது நபி அவர்கள் மக்காவிலிருந்து மதீனா நகருக்கு சென்றடைந்த வருடம்.

B- இந்து நாட்காட்டியின்படி சாலிவாகன சகாப்தத்தின் ஆரம்பம். (04 புள்ளிகள்)

iii. தொல்பொருள் அகழ்வுகள் என்பதனால் குறிப்பிடப்படுவது யாது என்பதனை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

04) i. நாம் உணவாகக் கொள்ளும் பின்வரும் பயிர்கள் முதன்முதலில் எந்நாடுகளில் பயிர்செய்யப்பட்டன என்பதனைக் குறிப்பிடுக.

- நெற் பயிர்ச்செய்கை
- சோளப் பயிர்ச்செய்கை
- கோதுமை பயிர்ச்செய்கை (03 புள்ளிகள்)

ii. மனிதன் வாழும் பிரதேசங்கள், முகத்தின் அமைப்பிற்கு ஏற்ப நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளான். அவற்றை எழுதுக. (04 புள்ளிகள்)

iii. பழைய கற்கால மனிதன் மரணச்சடங்குகள் செய்த முறை தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

05) i. இலங்கையில் வாழ்ந்த ஆதி குடியேற்ற மக்கள் உணவாக உட்கொண்டவை மூன்றினைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

ii. ஹொலோசின் யுகத்தில் காணப்பட்ட புதிய காலநிலை பற்றி இரு காரணிகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

iii. ஆதிகாலத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் தொடர்பாக ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

(05 புள்ளிகள்)

06) i. மனிதனின் கலாசார மாற்றம் நிகழ்ந்த பிரதான காலங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ii. பழைய கற்காலத்தில் மனிதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதனை இரண்டு வாக்கியங்களினூடாக எழுதுக. (04 புள்ளிகள்)

iii. ஆதிகாலத்தில் 'கலாசார மாற்றம்' என்பதனால் குறிப்பிடப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

07) i. ஹோமோ சேப்பியன்ஸ் மானிடனின் திறமைகள் மூன்றைக் குறிப்பிடுக.(03 புள்ளிகள்)

ii. புதிய கற்காலத்தில் மனிதன் பயிரிட்ட தானிய வகைகள் நான்கினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. மனிதன் விவசாயத்திற்கு பழகியமையால் ஏற்பட்ட மிகச் சிறப்பான மாற்றம் தொடர்பில் சுருக்கமாக எழுதுக. (05 புள்ளிகள்)